JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI**

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **31/2015** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.12** | Prosecution /Defence / Court | |
| Name | **RamPrabhu (SB Inspector)** | Village | |
| Father's Name | குருகுலராஜ் | Taluk | Erode |
| | | Age | |

**A1, A3, A4 present. A2 absent. Petition 317 CRPC filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 23.07.2025.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள தனிப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2014 ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது அன்றைய தினம் பெருந்துறை காவல் நிலைய குற்ற எண்.685/2014 சட்டபிரிவு 379 வழக்கில் காணாமல்போன இருசக்கர வாகனத்தை கண்டுபிடிக்கும் பொருட்டு பெருந்துறை புதிய பேருந்து நிலையம் செக்போஸ்ட் அருகில் காலை 9.30 மணிக்கு வாகன தணிக்கையில் இருந்த போது அந்த வழியாக வந்த TN56 A2151 என்ற Splender இரு சக்கர வாகனத்தை நிறுத்திய போது வாகனத்தை ஓட்டி வந்த நபர் தப்பி ஓட எத்தனித்த போது அவரை பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயரை ஆனந்த் (எ) ஆனந்தகுமார் த/பெ. துரைசாமி ராக்கியபாளையம், அவினாசி என்று கூறியவரை விசாரித்த போது மேற்படி வாகனத்தை திருடி வந்தது தெரிய வந்தது.

2. எனவே அவரை 10 மணிக்கு கைது செய்தும், கீழ்கண்ட சாட்சிகள் மேகநாதன் மற்றும் சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் பதிவு செய்தேன். எதிரி என்னிடம் வழக்கில் பயன்படுத்திய

கத்தியை தங்களிடம் ஒப்படைக்கிறேன் என்று பின்பு அவர் தன்னிடமிருந்து ஒப்படைத்த Premier என்ற எழுத்துள்ள சிமெண்ட் கலரில் உள்ள பேப்பர் கட் செய்யும் கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி சான்றாவணம் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. கத்தி அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு குற்ற எண்.624/2014ல் புலன் விசாரணை அதிகாரி ரமேஷ் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சக்திவேல் மற்றும் மேகநாதன் நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னை சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னென்ன சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் ஒரு இருசக்கர வாகனம் மற்றும் ஒரு கத்தி ஆகும்.

2. நான் கைப்பற்றிய இருசக்கர வாகனத்திற்கும், கத்திக்கும் தனித்தனியாக கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன் என்றால் சரிதான். ஒரே கைப்பற்றுதல் மகஜராக தயார் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டு வழக்குகள் இருந்ததால் தனித்தனியாக தயார் செய்யவில்லை. குற்ற எண்.624/2014 என்று எவ்வாறு குறிப்பிட்டேன் என்றால் நான் அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்ததால் மற்ற குற்றத்தை பற்றி தெரிந்ததால் குறிப்பிட்டேன். படிவம் 91 ஐ நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். நான் புலனாய்வு அதிகாரிக்கு இந்த வழக்கில் கைப்பற்றிய சொத்தை பற்றி தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. வழக்கில் பயன்படுத்திய கத்தி தான் எதிரி பயன்படுத்திய கத்தி என்று என்னால் ஊர்ஜிதமாக சொல்ல முடியுமா? என்றால் எதிரி என்னிடம் ஒப்பு கொண்டதால் தெரிவித்துள்ளேன். வழக்கில் எதிரி பயன்படுத்திய சொல்லப்படும் கத்தி

என்று புலன் ஆய்வு அதிகாரி சாட்சிகளை விசாரித்து ஊர்ஜிதம் செய்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்கு மூலம் என் கையால் எழுதப்பட்டதா? என்றால் இல்லை. மகஜரில் சாட்சி கையெழுத்து செய்த மேகநாதன் மற்றும் சக்திவேல் என்ன வாக்குமூலம் புலனாய்வு அதிகாரியிடம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. இந்த வழக்கில் எதிரியை சேர்க்க வேண்டும் என்பதற்காக இந்த குற்ற எண்ணை உருவாக்கி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கத்தியை எங்கிருந்து கொடுத்தார் என்றால் பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து கொடுத்தார். மகஜரில் எதிரி பேண்ட் பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்து கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுக்கும் போது கத்திக்கு கவர் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. எதிரியை கைது செய்ததாகவும், எதிரி ஆஜர் செய்ததாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், நானும் புலனாய்வு அதிகாரியும் சேர்ந்து எதிரிகளை இந்த வழக்கில் சேர்ப்பதற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை